## HDFC ERGO ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

பாலிசி வாசகங்கள்

பாரத் கிரிஹ ரக்ஷா பாலிசி

### உள்ளடக்கம்


**A.** பாலிசி - காப்பீடு ஒப்பந்தம் **2**

**B.** காப்பீடு செய்யப்பட்ட அபாயங்கள் **3**

**C:** வீட்டுக் கட்டட காப்பீடு **4**

**D:** வீட்டிலிருக்கும் பொருள்கள் காப்பீடு **6**

**E:** கூடுதல் காப்பீடுகள் **7**

**F.** விலக்கல்கள் (நாங்கள் எதற்கு காப்பீடு வழங்கவில்லை) இந்த பாலிசியின் கீழ்லுள்ள அனைத்து காப்பீடுகளுக்கும் **8**

**G.** நிபந்தனைகள் **9**

**H.** காப்பீட்டில் செய்யப்படும் மாற்றங்கள் **14**

**I.** குறைகாப்பீட்டு உரிமை விடுப்பு **15**

**J.** மற்ற விசயங்கள் **15**

**K.** குறைதீர்ப்பு **15**

**L.** எங்களைப்பற்றி **20**


PWW/Ver - 1 MAR2021


HDFC ERGO ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் IRDAI Reg. No.146 CIN: U66030MH2007PLC177117.பதிவு - கார்பொரேட் அலுவலகம்: 1வது தளம், எச்டிஎஃப்சி ஹவுஸ், 165-166 பேக்பே ரெக்ளமேஷன், எச்.டி. பரீக் மார்க், சர்ச்கேட், மும்பை - 400020. மேலே காட்டப்பட்டிருக்கும் விற்பனைச் சின்னம் எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட் மற்றும் எர்கோ இன்டர்நேஷனல் ஏஜி க்குச் சொந்தமானது, உரிமை பெற்று நிறுவனம் இதைப் பயன்படுத்துகிறது. UIN: HDFC ERGO - Bharat Griha Raksha - IRDAN125RP0003V01202021

## பாரத் கிரிஹ ரக்ஷா பாலிசி

**பாரத் கிரிஹ ரக்ஷா** பாலிசிக்கு விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் காப்பீடுகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். நீங்கள் பிரீமியத் தொகையைச் செலுத்தியதுடன் உங்களைக் குறித்த, உங்கள் வீட்டு கட்டிடம் மற்றும் வீட்டிலிருக்கும் பொருள்கள் குறித்த விவரங்களையும் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் எங்களிடம் தெரிவித்திருக்கும் விவரங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதன் அடிப்படையிலும்,எங்களிடம் நீங்கள் பிரீமியம் செலுத்தியதாலும் இந்த பாலிசி ஆவணம் மற்றும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் பாலிசி அட்டவணையில் குறிப்பிட்டிருப்பது போல் நாங்கள் உங்களுக்குக் காப்பீடு வழங்குவதற்கு உறுதி அளிக்கிறோம்.

## A. பாலிசி மற்றும் காப்பீடு ஒப்பந்தம்

### A1. பாலிசி

கீழே கொடுத்திருப்பது போல் இந்த **பாரத் கிரிஹ ரக்ஷா** பாலிசி உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் செய்துகொண்டிருக்கும் ஓர் ஒப்பந்தம் ஆகும்.

1. இந்த பாலிசி ஆவணம்,
2. இந்த பாலிசி ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பாலிசி அட்டவணை,
3. இந்த பாலிசி ஆவணத்துடன் சேர்க்கப்பட்டு ஆவணத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் மேற்குறிப்புகள், ஏதாவது இருந்தால்,
4. நீங்கள் எங்களிடமிருந்து வாங்கியிருக்கும் கூட்டு சேர்க்கைகள் (ஆட்-ஆன்),
5. நீங்கள் அல்லது உங்கள் சார்பில் எங்களிடம் செய்துகொண்டிருக்கும் முன்மொழிவுகள் மற்றும் உறுதிமொழி அறிவிப்புகள்.

### A2. செயலெல்லை

1. உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த பாலிசியின் செயலெல்லை உங்களுக்கு மற்றும்/அல்லது உங்கள் வீட்டு கட்டடம் மற்றும் / அல்லது இந்த பாலிசி அட்டவணையில் எழுதப்பட்டிருக்கும் வீட்டிலிருக்கும் பொருள்களுக்கானதாக இருக்கும்.
2. ஒருவருக்கும் மேற்பட்ட நபர்கள் இந்த பாலிசியின் கீழ் காப்பீடு பெறுவதாக இருந்தால் நீங்கள் ஒவ்வொருவரும் இணை பாலிசிதாரர்களாக இருப்பீர்கள். உங்களில் ஒருவருக்கு நாங்கள் அனுப்பும் அறிவிப்பு அல்லது கடிதம் அனைவருக்கும் அனுப்பியதாகக் கருதப்படும். உங்களில் ஒருவர் செய்துகொள்ளும் கிளெய்ம், அறிவிப்பு, கோரிக்கை அல்லது மேற்கொள்ளும் நடவடிக்கை அனைத்தும் நீங்கள் அனைவரும் ஒன்றாகச் செய்துகொண்டதாகக் கருதப்படும்.
3. நீங்கள் ஒருவேளை உங்கள் வீட்டு கட்டடம் மற்றும் / அல்லது வீட்டிலிருக்கும் பொருள்களை ஒரு வங்கியிடம் பிணையமாக வைத்திருந்தால், பாலிசி அட்டவணையில் 'வங்கியுடன் செய்துகொண்ட ஷரத்து' உட்குறிப்பு சேர்க்கப்பட்டு வங்கியின் பெயரும் அதில் எழுதப்படும். இந்த ஏற்பாட்டின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் இந்த பாலிசியில் கூடுதல் உட்பிரிவாகச் சேர்க்கப்படும்.

### A3. பாலிசி அட்டவணை

உங்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டு செயலெல்லையில் இந்த பாலிசி அட்டவணை ஒரு முக்கிய ஆவணமாக இருக்கும். இதிலிருப்பவை:

1. உங்கள் சொந்த விவரங்கள்,
2. பாலிசி காலவரை,
3. காப்பீடு செய்துகொண்டிருக்கும் உங்கள் சொத்து விவரம்,
4. மொத்த காப்புறுதி தொகை, ஒவ்வொரு காப்பீட்டிற்குமான காப்புறுதி தொகை அல்லது காப்பீடு பெறும் உருப்படிகள், வரம்புகள் ஏதாவது இருந்தால் மற்றும் உப-வரம்புகள்
5. நீங்கள் வாங்கியிருக்கும் காப்பீடுகள்,
6. இந்த காப்பீடுகளுக்காக நீங்கள் செலுத்தியிருக்கும் பிரீமியங்கள்
7. நீங்கள் விரும்பி சேர்த்திருக்கும் ஆட்-ஆன் காப்பீடுகள்,
8. இதர பிற முக்கிய மற்றும் சம்பந்தப்பட்ட விசயங்களும் விவரங்களும் ஆகும்.

## B. வரையறைகள்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளுக்கு இந்த பாலிசியில், பாலிசி அட்டவணையில் மற்றும் மேற்குறிப்புகளில் சிறப்பு அர்த்தங்கள் இருக்கும்.

பாலிசி ஆவணத்தில் சிறப்பு அர்த்தங்களுடன் பிரயோகம் செய்யப்பட்டிருக்கும் இந்த வார்த்தைகளின் முதல் எழுத்துகள் பெரிய அச்செழுத்துகளாக எழுதப்பட்டிருக்கும்.

1. வங்கி என்றால் ஒரு வங்கியை அல்லது நிதி நிறுவனம் ஒன்றைக் குறிக்கும்
2. கட்டட உட்பரப்பு என்றால்:
    1. உங்கள் வீட்டு பிரதான கட்டடத்தைப் பொருத்த வரையில் வெளிப்புர சுவர்களுக்கு வெளியிலுள்ள பகுதிகள், சேவைகளுக்காகக் கட்டப்பட்ட பரப்புகள், தனிப்பட்ட பால்கனி அல்லது வராண்டா மற்றும் தனிப்பட்ட திறந்த மொட்டை மாடி ஆகியவை தவிர்த்து வெளிப்புற சுவர்களால் மூடப்பட்ட பகுதிகள், இதில் குடியிருப்பு பரப்பிலுள்ள உட்புற சுவர்களுக்கு உள்ளடங்கிய பரப்புகளும் அடங்கும்;
    2. இந்த இடத்திலுள்ள மூடப்பட்ட கட்டுமானத்திலுள்ள நிகர வசிப்பிடங்கள் அடங்கும்;
3. பால்கனி, வராண்டா பரப்பு, மொட்டை மாடி பரப்பு, பார்க்கிங் பரப்பு அல்லது உங்கள் வீட்டின் பகுதியாக இருக்கும் மூடப்பட்டிருக்கும் பரப்புகளுக்கு நிகர பயன்படுத்தப்படும் தரைப் பரப்பில் 25%

## பாரத் கிரிஹ ரக்ஷா பாலிசி

3. இந்த பாலிசியின் கீழ் காப்பீடு ஆரம்பமாகும் தேதி, மற்றும் நேரம் ஆரம்பமாகும் தேதியாகக் கருதப்படும். இது பாலிசி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

4. கட்டுமான செலவினங்கள் என்பது உங்கள் வீட்டு கட்டடத்தைக் கட்ட தேவைப்படும் தொகை ஆரம்பமாகும் தேதி வரையில் கருதப்படும். கீழ்க்கண்டவாறு இத் தொகை கணக்கிடப்படும்:

a. ***வசிப்பிடமாகக் கட்டப்படும் உங்கள் வீடு மற்றும் அதில் பொருத்தப்படும் ஃபிட்டிங்குகள் மற்றும் ஃபிக்ஸ்சர்கள் :*** கட்டட உட்பரப்பு சதுர மீட்டரில் X ஆரம்பமாகும் தேதியில் கட்டுமான செலவினங்கள் வீதம் கட்டுமான செலவினங்கள் வீதம் என்பது ஆரம்பமாகும் தேதியில் உங்கள் வீட்டு கட்டடம் கட்டப்படுவதற்கு ஆகும் செலவினங்கள் நாளது தேதியில் ஆகும் செலவின வீதம், இந்த வீதம் தொகை நீங்கள் குறிப்பிட்டு நாங்கள் ஏற்றுக்கொண்டதாக இருக்கும், இத் தொகை பாலிசி அட்டவணையில் எழுதப்பட்டிருக்கும்.

b. ***கூடுதல் கட்டுமானங்களுக்கு:*** ஆரம்பமாகும் தேதியில் நாளது தேதியில் ஆகும் கட்டுமான செலவின வீதம், இந்த வீதம் தொகை நீங்கள் குறிப்பிட்டு நாங்கள் ஏற்றுக்கொண்டதாக இருக்கும்,

5. மேற்குறிப்பு என்பது பாலிசியில் எங்களால் செய்யப்படும் திருத்தமாக இருக்கும் (இது காப்பீடு பாலிசியில் செய்யப்படும் கூடுதல் வாசகங்கள், வாசகங்கள் நீக்கப்படுதல், திருத்தங்கள், விலக்கல்கள் அல்லது நிபந்தனைகளைச் சேர்த்தல் ஆக இருக்கும்) இவை ஒரிஜினல் பாலிசியின் வரையறைகள் அல்லது நோக்கத்தை மாற்றக்கூடியவையாக அமையும்.

6. வீட்டிலிருக்கும் பொருள்கள் என்பவை உங்கள் வீட்டு கட்டுமானத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டவையாக, சேர்க்கப்பட்டவைகளைக் குறிப்பிடுவதாக அமையும். வீட்டிலிருக்கும் பொருள்களில் பொதுவானவை மற்றும்/அல்லது விலை மிக்கவையாக இருக்கக் கூடும்.

7. பொதுவான பொருள்கள் என்பனவற்றில் உங்கள் வீட்டில் பயன்படும் பொருள்களாக இருக்கும், உ-ம். ஃபர்னிச்சர், எலக்டிரானிக் ஐட்டம்களும் பொருள்களும், ஆன்டெனா, சோலார் பேனல்கள், வாட்டர் ஸ்டோரேஜ் சாதனங்கள், கிச்சன் சாதனங்கள், எலக்டிரிகல் சாதனங்கள் (சுவர்களில் பொருத்தப்பட்டிருப்பவை உட்பட), ஆடைகள் மற்றும் துணிமணிகள் மற்றும் இவை போன்றவை அடங்கும்.

8. வீட்டிலிருக்கும் பொருள்களில் விலை மிக்கவைகளில் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பெயின்டிங்குகள், கலை அம்சம் பொருந்தியவை, தொல்பொருள்கள், அருங்கலைப் பொருள்கள் மற்றும் அவை போன்ற விலைமிக்க பொருள்கள் அடங்கும்.

9. காப்பீடுதாரர் என்பவர் இந்த பாலிசியின் கீழ் காப்பீட்டை வாங்கியவர் ஆவார்.

10. காப்பீடு சொத்து என்பதில் உங்கள் வீட்டு கட்டடம், வீட்டிலிருக்கும் பொருள்கள் மற்றும் இந்த பாலிசியில் காப்பீடு அளிக்கப்பட்டிருக்கும் பொருள்கள் அடங்கும்.

11. கச்சா கட்டுமானம் என்றால் கட்டடம்(கட்டடங்கள்) சுவர்கள் / கூரைகள் மரச்சட்டங்கள் / பனை ஓலை அல்லது தென்னை ஓலை மற்றும் / அல்லது வைக்கோல் போட்டு கட்டப்பட்டவையாக / மூங்கில் / பிளாஸ்டிக் துணி / நிலகீல் / கான்வாஸ் / தார்பாலின் மற்றும் அவை போன்ற பொருட்களால் கட்டுமானம் செய்யப்பட்டவையாக இருக்கும்.

12. பாலிசி காலவரை என்பது பாலிசி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் செயல்படும் தேதி மற்றும் நேரத்திலிருந்து ஆரம்பமாகி பாலிசி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கெடு தேதி நள்ளிரவு வரையில் அல்லது இந்த பாலிசியின் **பிரிவு -G (III)** - யில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீக்கல் அல்லது , முடிவுறுத்தல் வரை, இதில் எது முதலில் நிகழ்கிறதோ அது வரையில் முடிவடையும்.

13. இந்த பாலிசியின் **பிரிவு A (3)**-ல் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆவணத்தில் உங்கள் விவரங்கள் மற்றும் உங்கள் காப்பீட்டு விவரங்கள் எழுதப்பட்டிருக்கும் இந்த ஆவணம் இந்த பாலிசியின் ஓர் அங்கமாகக் கருதப்படும்.

14. இந்த காப்பீட்டிற்காக நீங்கள் எங்களுக்குச் செலுத்தும் தொகை பிரீமியம் என்று கருதப்படும். இந்த பாலிசி அட்டவணையில் காட்டப்படும் பிரீமியம் தொகை பாலிசி காலவரை மற்றும் அனைத்து வரிகள் மற்றும் தீர்வைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

15. பக்கா கட்டுமானம் என்பது கச்சா கட்டுமானத்தைத் தவிர்த்த கட்டுமானத்தைக் குறிக்கும்.

16. உங்கள் மனைவி அல்லது கணவர் வாழ்க்கைத் துணை என்று அறியப்படும்.

17. காப்புறுதி தொகை என்பது பாலிசி அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் காப்புறுதி தொகையைக் குறிக்கும் மற்றும் இந்த பாலிசியின் **பிரிவு C(4)** மற்றும் **பிரிவு D(2)**-ல் குறிப்பிடப்பட்டு விளக்கப்பட்டிருப்பதைக் குறிக்கும். ஒவ்வொரு காப்பீட்டிற்கு அல்லது அதன் பகுதிக்கு மற்றும் ஒவ்வொரு இழப்பிற்கு எங்கள் அதிகபட்ச பொறுப்பைக் குறிப்பதாக இருக்கும்.

18. ஒட்டுமொத்த இழப்பு என்பது காப்பீடு சொத்து அல்லது உறுப்படி முழுமையாக அழிந்துபோகும் நிகழ்வு அல்லது இழப்பு அல்லது மீளெடுக்கவியலாத அல்லது பழுதை சரிசெய்யவியலாத வகையில் சேதமடைதல் அல்லது அந்த உறுப்படியின் அல்லது ஒட்டுமொத்த சொத்து பழுதை சரிசெய்யும் செலவினம் காப்புறுதி தொகையை விட அதிகமாகும் நிலைமையைக் குறிக்கும்.

19. நாங்கள், நாம், எங்கள், காப்புறுதியாளர் என்பது எச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி, இந்த பாலிசியின் கீழ் காப்பீடு வழங்கும் நிறுவனத்தைக் குறிக்கும்.

20. நீ, நீங்கள், உங்களுடைய, காப்பீடு பெற்றிருக்கும் நபர்/நபர்கள் என்பது இந்த பாலிசியின் கீழ் காப்பீடு வாங்கியிருப்பவரை, காப்பீடு பெற்றிருப்பவர்களைக் குறிக்கும்.

21. உங்கள் வீட்டுக் கட்டடம் என்பது இந்த பாலிசி **பிரிவு – C(2)**-ல் விளக்கிக் குறிப்பிடப்பட்டிருப்பது போல் குடியிருப்பு இடத்தை, கூரை மற்றும் சுவர்களால் மூடப்பட்ட வீட்டையும் நிலஅறையையும் (இருந்தால்) வசிப்பிடமாகக் கொண்டிருப்பதைக் குறிக்கும்.

## B. காப்பீடு செய்யப்பட்ட அபாயங்கள்

பாலிசி காலத்தில் கீழ்க்கண்ட எதிர்பாராத நிகழ்வுகளால் காப்பீடு சொத்திற்கு ஏற்படும் பௌதீக இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுகளுக்கு நாங்கள் காப்பீடு வழங்குகிறோம்.

காப்பீடு பெறும் நிகழ்வுகளை பத்தி A -லும், காப்பீடு பெறாத நிகழ்வுகளை பத்தி B-விலும் பட்டியலிட்டிருக்கிறோம்.

| பத்தி A | பத்தி B |
|---|---|
| காப்பீடு சொத்துகளுக்கு ஏற்படும் பௌதீக இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுக்கு நாங்கள் இவ்வாறு காப்பீடு வழங்குகிறோம் | காப்பீடு சொத்துகளுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுக்கு நாங்கள் காப்பீடு வழங்குவதில்லை |
| தீ விபத்து | பொது அதிகாரம் மேற்கொள்ளும் காப்பீடு சொத்துகளை எரித்தல் நடவடிக்கை. |
| வெடித்தல் அல்லது குமுங்குதல் | - |
| மின்னல் | - |
| நில நடுக்கம், எரிமலை வெடித்தல் , அல்லது இதர பிற இயற்கை வலிப்புகள் | - |
| புயல், சூறாவளி, கடும் புயல், கொந்தளிப்பு, பெரும்புயல், சூறைப்புயல், சுனாமி, வெள்ளம் மற்றும் மூழ்கடித்தல் | - |
| உங்கள் வீட்டு கட்டடம் கட்டப்பட்டிருக்கும் நில தரையமிழ்வு, நிலச்சரிவு, பாறைச்சரிவு | இவைகளால் ஏற்படலாம்<br>a. புதிய கட்டுமானங்களில் வழக்கமான வெடிப்புகள், செட்டில்மென்ட் அல்லது பெட்டிங் டவுன்,<br>b. புதிதாகச் செய்யப்பட்ட, கடலோர அல்லது ஆறுநீர் அரிப்பு காரணமாக நிலம் செட்டில் ஆதல் அல்லது அசைதல்<br>c. குறைபாடுள்ள வடிவமைப்பு அல்லது வேலைப்பாடு அல்லது குறைபாடுள்ள பொருள்கள் பயன்பாடு, அல்லது<br>d. சொத்துகளைத் தகர்த்தல், கட்டுமானம் செய்தல், கடமைப்பில் மாற்றங்கள் அல்லது பழுதுகளைச் சரிசெய்தல், அல்லது<br>e. நிலத்தில் செய்யப்படும் வேலைகள் அல்லது ஆழத்தோண்டல். |
| புதர் தீ, கானக தீ, காட்டு தீ | - |
| ஏதாவது ஒரு அதிர்ச்சி சேதம் அதாவது வெளியிலிருக்கும் பௌதீக பொருளுடன் மோதுவதால் ஏற்படும் அதிர்ச்சி (உ-ம். வாகனம், மரம் முறிந்து சரிதல், விமானம், சுவர் ஆகியவை) | சோனிக் அல்லது சூப்பர்சோனிக் வேகத்தில் பறக்கும் விண்வெளிச் சாதனங்கள், விமானங்கள் அல்லது இதர பிற விண்வெளிப் பொருள்கள் பறப்பதால் ஏற்படும் அமுத்த அலைகள் காரணமாக ஏற்படும் அதிர்ச்சிகள் |
| ஏவுகணை பரிசோதனை நிகழ்வுகள் | - |
| கலகம், வேலை நிறுத்தம், கெடு நோக்கத்துடன் சேதம் விளைதல் | இவைகளால் நிகழலாம்<br>a. அரசு ஆணை அல்லது ஒரு சட்டபூர்வ அதிகார உத்தரவின் காரணமாக தற்காலிக அல்லது நிரந்தர உடைமையைப் பறித்தல், பறிமுதல், கட்டளையிடுதல், கோரிக்கை விடுத்தல் அல்லது அழித்தல் நடவடிக்கையால் இவை ஏற்படலாம், அல்லது<br>b. யாரோ ஒருவர் சட்டவிரோத ஆக்ரமிப்பினால் உங்கள் வீட்டைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக உங்களிடமிருந்து பறித்துக்கொள்ளலாம். |
| தீவிரவாத நடவடிக்கை (இணைக்கப்பட்டிருக்கும் தீவிரவாத பிரிவு அனுசரித்து காப்பீடு வழங்கப்படும்) | தீவிரவாத நடவடிக்கை பிரிவு அனுசரித்த விலக்கல்கள் மற்றும் விதிமீறல்கள் |
| தண்ணீர் தொட்டிகள், கருவிகள் மற்றும் பைப்புகள் வெடித்தல் அல்லது நிரம்பி வழிதல். | - |
| ஆட்டோமேடிக் ஸ்பிரிங்க்ளர் அமைப்புகளிலிருந்து நீர்கசிவு. | a. உங்கள் வீட்டில் அல்லது நீங்கள் வசிக்கும் வீடு இருக்கும் கட்டிடத்தில் செய்யப்படும் பழுது சரிபார்த்தல் அல்லது திருத்தி அமைத்தல் |

| | |
|---|---|
| | நடவடிக்கைகள்<br>b. பொருத்தப்பட்டிருக்கும் ஸ்பிரிங்க்ளர் அமைப்பில் ரிப்பேர், அகற்றுதல் அல்லது நீட்சி செய்தல், அல்லது<br>c. உங்களுக்குத் தெரிந்திருக்கும் கட்டுமான குறைபாடுகள் |
| மேலே சொல்லப்பட்டு காப்பீடு வழங்கப்பட்டிருக்கும் இடர்கள் காரணமான மற்றும் அதைச் சார்ந்து நிகழ்வு நடந்த தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் நிகழும் திருட்டு. | இதனால் என்றால்<br>a. உங்கள் வீட்டின் வெளிச்சுவர்களில் அல்லது கூரையில் பத்திரமாகப் பதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த பொருள் அல்லது<br>b. ஏதேனும் ஒரு பொருள் உங்கள் வீட்டிற்கு வெளியில் திருடு போதல். |

## C. வீட்டுக் கட்டட காப்பீடு

### 1. நாங்கள் எதற்கு காப்பீடு வழங்குகிறோம்

இந்த பாலிசி **பிரிவு-B**-ல் பட்டியலிடப்பட்டிருக்கும் காப்பீடு பெற்றிருக்கும் நிகழ்வுகளால் **உங்கள் வீட்டு கட்டடம்** பௌதீக ரீதியான இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுக்கு உட்படும் போது நாங்கள் காப்பீடு வழங்குகிறோம் இந்த பாலிசி **பிரிவு C(5)(f)** -ல் குறிப்பிட்டிருப்பது போல் ஆர்கிடெக்ட், சர்வேயர், கன்சல்டிங் இஞ்சினியர் கட்டணங்கள், இடிபாடுகளை அகற்றும் செலவினம் ஆகியவற்றிற்கும் காப்பீடு வழங்குகிறோம். இந்த பாலிசி **பிரிவு-C(6)**-ல் குறிப்பிட்டிருப்பது போல் காப்பீடு நிகழ்வு காரணமாக உங்கள் வீட்டுக் கட்டடம் வசிப்பதற்கு ஏற்றதாக இல்லாமல் இருக்கும் காலத்தில் உங்களுக்கு ஏற்படும் வாடகை இழப்பு மற்றும் மாற்று இருப்பிடத்திற்கான வாடகையை நீங்கள் குறிப்பிட்டு கேட்டு அதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் அளவில் நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.

### 1. உங்கள் வீட்டுக் கட்டடம்

a. **உங்கள் வீட்டுக் கட்டடம்** என்பது குடியிருப்பு இடத்தை, கூரை மற்றும் சுவர்களால் மூடப்பட்ட வீட்டையும் நிலஅறையையும் (இருந்தால்) வசிப்பிடமாகக் கொண்டிருப்பதைக் குறிக்கும்.

b. **உங்கள் வீட்டுக் கட்டடம் என்பதில்**

i. அதன் தரை, சுவர்கள் அல்லது கூரையில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருக்கும் சானிடரி ஃபிட்டிங்குகள், எலக்டிரிகல் ஒயரிங் மற்றும் இதர பிற ஃபிட்டிங்குகளை உள்ளடக்கியதாகக் கருதப்படும்.

ii. கீழ்க்கண்ட ‘கூடுதல் கட்டுமானங்கள்’ அதே இடத்தில் இருந்து அவை உங்கள் வீட்டு வசிப்பிடத்தின் பாகமாக இருக்க வேண்டும்:

a) கராஜ், வீட்டுடன் சேர்ந்த அவுட்-ஹவுஸ், வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடங்கள்,

b) காம்பவுண்டு சுவர்கள், வேலிகள், கேட்டுகள், தாங்கும் சுவர்கள், உட்புற போக்குவரத்து வழிகள்,

c) வராண்டா அல்லது முக மண்டபம் மற்றும் அவை போன்றவை,

d) செப்டிக் டேங்க், பையோ-கேஸ் அமைப்புகள், நிரந்தரமான நீர் தேக்க தொட்டிகள் அல்லது டேங்குகள்,

e) சோலார் பேனல்கள், காற்றாற்றல் சுழலி, ஏர் கண்டிஷனிங் அமைப்புகள், மத்திய ஹீட்டிங் சிஸ்டம்கள் மற்றும் அவை போன்றவை, இவை வீட்டிலிருக்கும் காப்பீடு செய்யப்பட்ட பொருள்களாகச் சேர்க்கப்பட்டிருக்காத பட்சத்தில்,

iii. பாலிசி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இதர பிற கட்டுமானங்கள்.

c. உங்கள் வீட்டு கட்டடம் என்பதில் வீட்டிலிருக்கும் பொருள்கள் சேர்க்கப்படாமலிருக்கும்.

### 2. வீட்டு உபயோகம்

a. உங்கள் வீட்டு கட்டடம் வசிப்பிடமாக உபயோகப்பட்டு அதில் நீங்கள், உங்கள் குடும்பத்தினர் அல்லது வாடகைக் குடி, குத்தகை எடுத்திருப்பவர் அல்லது பணியாளர் வசித்துக் கொண்டிருக்க வேண்டும்.

b. கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் நாங்கள் தொகை கொடுக்க மாட்டோம்

i. உங்கள் வீட்டு கட்டடம் ஓய்வில்லமாக அல்லது வாடகைத் தங்கு விடுதியாகவும் உணவு விடுதியாகவும் (லாட்ஜிங் மற்றும் போர்டிங்) பயன்படுத்தப்பட்டால் ,

அல்லது

ii. உங்கள் வீட்டு கட்டடம் அல்லது அதன் ஒரு பகுதி வசிப்பிடமாக அல்லாமல் வேறு நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டால், இதில் விதிவிலக்காக நீங்கள் வசிக்கும் இடமாகவும் மற்றும் நீங்கள் சுய தொழில் புரிவோராக இருக்கும் பட்சத்தில் உங்கள் வாழ்வகை வருமானத்திற்கானதாகப் பயன்படலாம், அல்லது பொது நல அதிகாரத்தின் ஆணை காரணமாக நீங்கள் உங்கள் அலுவலகத்தைத் தற்காலிகமாக உங்கள் வீட்டு கட்டடத்தில் மாற்றிக் கொண்டிருக்கலாம்.

## 3. காப்புறுதி தொகை

a. ஆரம்பமாகும் தேதியில் உங்கள் வீட்டு கட்டடம் கட்டப்படுவதற்கு ஆகும் செலவினங்கள் நாளது தேதியில் ஆகும் செலவின வீதமாக இருக்கும், இந்த வீதம் தொகை நீங்கள் குறிப்பிட்டு நாங்கள் ஏற்றுக்கொண்டதாக இருக்கும், பாலிசி அட்டவணையில் எழுதப்பட்டிருக்கும் இந்த தொகை காப்புறுதி தொகையாக, ஒருவேளை வீட்டு கட்டடத்திற்கு முழுமையாக இழப்பு ஏற்படும் பட்சத்தில் அதிகபட்ச தொகையாக நாங்கள் வழங்க வேண்டியிருக்கும்.

b. பாலிசி காலவரை ஓராண்டிற்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில், உங்கள் காப்புறுதி தொகையை பாலிசி காலத்தில் வருடந்தோறும் பாலிசி கால வருட இறுதியில் 10% தானாகவே அதிகரிக்கப்படும், ஆரம்பமாகும் தேதியில் இருந்த காப்புறுதி தொகை 100% வரை அதிகரிக்கப்படும் இதற்கு கூடுதல் பிரீமியம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

c. ஆண்டுதோறுமான பாலிசிக்கு பாலிசி வருட ஆரம்ப தேதியிலிருந்து 10% த்தில் 1/365 வீதம் தானாகவே ஒவ்வொரு நாளிலும் காப்புறுதி தொகை அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

d. காப்புறுதி தொகை மீட்டமைப்பு: இந்த பாலிசியின் பிரிவு **G (III) (3) (b)**-ல் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தவிர்த்து, பாலிசி காலத்தில் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் காப்பீடு அதன் முழு அளவில் காப்புறுதி தொகை பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அதாவது, நாங்கள் எந்த ஒரு இழப்பிற்காவது இழப்பீடு வழங்கியிருந்தாலும், பாலிசியின் காப்புறுதி தொகை அதன் ஒரிஜினல் தொகையை மீட்டமைப்போம். காலாவதி ஆகாத பாலிசி காலத்திற்கு கழிந்திருக்கும் நாட்களுக்கு நீங்கள் வீதப்படியான பிரீமியம் தொகையைச் செலுத்திவிட வேண்டும். உங்களுக்குச் செலுத்த வேண்டிய நிகர கிளெய்ம் தொகையிலிருந்து நாங்கள் இந்த பிரீமியம் தொகையைக் கழித்துக்கொள்ள முடியும்.

## 4. நாங்கள் எவ்வளவு செலுத்துவோம்

a. காப்பீடு செய்துகொண்டிருக்கும் உங்கள் வீட்டு கட்டடத்திற்கு காப்பீடு செய்யப்பட்டிருக்கும் அபாயங்கள் ஏதேனும் நேரும் பட்சத்தில், சேதமடைவதற்கு முந்தைய நிலைமைக்கு உங்கள் கட்டடத்தை பெருவாரியாக மீட்டமைவு செய்யும் வகையில் ஆகும் செலவினங்களை நாங்கள் திருபிக் கொடுப்போம். நீங்கள் பழுதுகளைச் செய்ய முதலில் செலவழித்த பிறகு இந்த தொகையை நீங்கள் எங்களிடம் கோரிக்கை செய்து (கிளெய்ம் செய்து) பெற வேண்டும்.

b. நீங்கள் கிளெய்ம் செய்யும் தொகையை நாங்கள் கணக்கிடும் போது நீங்கள் உங்கள் விண்ணப்பப்படிவத்தில் அறிவித்து பாலிசி அட்டவணையில் குறிப்பிட்டிருக்கும் கட்டட உட்பரப்பு அளவிற்கு மிகாமலிருக்கும் கட்டட உட்பரப்புஅளவை எடுத்துக்கொள்வோம்.

c. அனைத்து உருப்படிகளுக்கும் சேர்த்து நாங்கள் செலுத்தும் தொகை பாலிசி அட்டவணையில் விட்டு கட்டட காப்பீட்டிற்கான காப்புறுதி தொகை அளவில் இருக்கும். ஒருவேளை பாலிசி அட்டவணையில் ஒவ்வொரு உருப்படிக்கும் வரம்பு தொகை எழுதப்பட்டிருந்தால், அதிகபட்சம் அந்த வரம்பு அளவிலேயே அந்த உருப்படிக்கு நாங்கள் தொகை செலுத்துவோம்.

d. ஒருவேளை உங்கள் வீட்டுக் கட்டடம் முழுமையாக அழிந்துவிட்டிருந்தால், உங்கள் வீட்டு கட்டடத்திற்கு உங்களுக்கு காப்புறுதி தொகை அளவில் தொகை செலுத்துவோம்.

e. கூடுதல் கட்டுமானம் ஒன்றுக்கு மட்டுமே அழிவு ஏற்பட்டிருந்தால், உங்களுக்கு அந்த கூடுதல் கட்டுமானத்தில் கட்டுமான செலவுக்குச் சமமான தொகையை மட்டுமே நாங்கள் உங்களுக்குச் செலுத்துவோம்.

f. பாலிசி **பிரிவு C(5)(c)**-ல் குறிப்பிட்டிருப்பதற்கும் கூடுதலாக, கீழ்க்கண்ட செலவினங்களுக்கான தொகையையும் நாங்கள் உங்களுக்குச் செலுத்துவோம்:

i. கிளெய்ம் செய்திருக்கும் தொகையில் 5% வரை ஆர்கிடெக்ட், சர்வேயர், கன்சல்டிங் இஞ்சினியரின் நியாயபூர்வ கட்டணங்கள் ;

ii. பழுதடைந்த இடத்திலிருந்து இடிபாடுகளை அகற்ற நியாயமான செலவினங்கள் கிளெய்ம் தொகையில் 2% வரை.

## 5. வாடகை வருமானம் இழப்பு அல்லது மாற்று இடத்திற்கு வாடகை

பாலிசி **பிரிவு C (5) (c)**-ல் குறிப்பிட்டிருப்பதற்கும்

கூடுதலாக, உங்களுக்கு ஏற்படும் வாடகை வருமான இழப்பு அல்லது மாற்று இடத்திற்கு வாடகை தொகையை கீழ்க்கண்டவாறு நாங்கள் செலுத்த உங்கள் வீட்டு கட்டடம் வாழ தகுதியில்லாததாக இருக்க வேண்டும், இந்த தகுதியிழப்பு காப்பீடு செய்துகொண்டிருக்கும் அபாயங்களில் ஒன்றினால் பௌதீகரீதியாக இழப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்:

a. நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு குடித்தன வாடகையாக வாழ்ந்து கொண்டிருந்தால், மாற்று இடத்தில் நீங்கள் கூடுதல் வாடகை செலுத்த வேண்டியிருந்தால், நீங்கள் உங்கள் வீட்டு கட்டடத்திற்குச் செலுத்தும் வாடகைக்கும், மாற்று இடத்தில் நீங்கள் செலுத்தும் கூடுதல் வாடகைக்கும் இடையிலுள்ள தொகையை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.

b. இந்த காப்பீட்டின் கீழ் நாங்கள் இழப்பீட்டை வழங்குவதற்கு உங்கள் வீட்டு கட்டடத்தை விட எந்த வகையிலும் மேம்பட்ட மாற்று இடத்திற்கு நீங்கள் குடி போயிருக்கக் கூடாது, நீங்கள் குடி போயிருக்கும் மாற்று இடம் உங்கள் வீட்டு கட்டடமிருக்கும் அதே நகரத்தில் இருக்க வேண்டும்.

c. வாடகை வருமான இழப்பு கீழ்க்கண்ட முறையில் கணக்கிடப்படும்: வாடகை வருமான இழப்பிற்கு செய்துகொண்டிருக்கும் காப்பீடு (இதை நீங்கள் உங்கள் விண்ணப்பப் படிவத்தில் அறிவித்திருக்க வேண்டும் அதை நாங்கள் பாலிசி அட்டவணையில் எழுதியிருக்க வேண்டும்) து ரிப்பேர் செய்ய ஆகும் காலம் ே நீங்கள் கேட்டுக்கொள்ளும் காலத்திற்கு வாடகை வருமான இழப்பு.

d. நீங்கள் உங்கள் வீட்டுக் கட்டடத்தில் மீண்டும் வாழ தகுதியாக ரிப்பேர் செய்து முடிக்கத் தேவைப்படும் நியாயமான கால அளவு வரையில் இந்த காப்பீடு உங்களுக்குக் கிடைக்கும். உங்கள் வீட்டுக் கட்டடம் வாழத் தகுதியில்லாததாக ஆன தேதியிலிருந்து அதிகபட்சம் மூன்று ஆண்டு காலத்திற்கு இந்த காப்பீடு கிடைக்கும். உங்கள் வீட்டுக் கட்டடம் வாழத் தகுதியில்லாத நிலையில் இருப்பதைச் சான்று கூறும் சான்றறிக்கை ஒன்றை ஒரு ஆர்கிடெக்ட் அல்லது உள்ளூர் அதிகாரத்திடமிருந்து பெற்று எங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

e. வீட்டு கட்டட காப்பீட்டில் பௌதீக சேதத்திற்காக நீங்கள் சமர்ப்பிக்கும் இழப்பீட்டை நாங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் மட்டுமே நீங்கள் கோரிக்கை செய்துகொள்ளும் வாடகை வருமான இழப்பீட்டை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

## D. நாங்கள் எதற்கு காப்பீடு வழங்குகிறோம்:

### 1. நாங்கள் எதற்கு காப்பீடு வழங்குகிறோம்:

இந்த பாலிசி பிரிவு ஆ-ல் பட்டியலிடப்பட்டிருக்கும் காப்பீடு செய்துகொண்டிருக்கும் அபாயங்களில் ஒன்றினால் பொதுவாக உங்கள் வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு பௌதீகரீதியான இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவு ஏற்படுவதற்கு நாங்கள் காப்பீடு வழங்குகிறோம். விலை மதிப்பில்லாத பொருள்களுக்கான ஆப்ஷனல் காப்பீட்டை நீங்கள் வாங்கியிருக்காத பட்சத்தில், உங்கள் வீட்டிலிருக்கும் விலைமதிப்பில்லாத பொருள்களுக்கு இந்த பாலிசியின் கீழ் காப்பீடு இல்லை.

### 2. காப்புறுதி தொகை:

a. இப் பாலிசி அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் வீட்டிலிருக்கும் பொருள்களுக்கான காப்புறுதி தொகை அளவே ஒருவேளை உங்கள் வீட்டிலிருக்கும் பொருள்கள் முழுவதுமாகச் சேதமடைந்தால் / இழப்பு நேர்ந்தால் அதிகபட்ச இழப்பீடு வழங்கப்படும்.

b. வீட்டு கட்டட காப்பீடு காப்புறுதி தொகையில் 20% க்குச் சமமான தொகைக்கு பொதுவாக வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது, இத் தொகை அதிகபட்சம் ரூ.10 இலட்சமாக (ரூபாய் பத்து இலட்சம்) இருக்கும் என்றாலும் இதற்கு நீங்கள் வீட்டு கட்டடம் மற்றும் விட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடு செய்துகொண்டிருக்க வேண்டும். ஒருவேளை நீங்கள் அதிக தொகைக்கு வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடு பெற விரும்பும் பட்சத்தில், காப்புறுதி தொகையை நீங்கள் உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருப்பதுடன் அதற்கான கூடுதல் பிரீமியத்தையும் செலுத்த வேண்டும்.

c. ஒருவேளை நீங்கள் வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு மட்டுமே காப்பீடு வாங்கியிருந்தால், வீட்டிலிருக்கும் பொருள்களுக்கான காப்புறுதி தொகையை நீங்கள் விண்ணப்பப் படிவத்தில் அறிவித்திருக்க வேண்டும்.

d. வீட்டிலிருக்கும் பொருள்களுக்காக நீங்கள் தேர்வு செய்யும் காப்புறுதி தொகை பொதுவாக வீட்டிலிருக்கும் பொருள்களை மீண்டும் நிர்மாணிக்கத் தேவைப்படுவதற்குப் போதுமானதாக இருக்க வேண்டும்.

e. ஒருவேளை உங்கள் வீட்டிலிருக்கும் விலைமதிப்பில்லாத பொருள்களுக்கு நீங்கள் காப்பீடு பெற விரும்பும் பட்சத்தில், விலைமதிப்பில்லாத பொருள்களுக்கான ஆப்ஷனல் காப்பீட்டை இந்த பாலிசி **பிரிவு E (1) (a)**-ல் உள்ளது போல் தேர்ந்தெடுக்க வேண்டும்.

f. காப்புறுதி தொகை மீட்டமைப்பு: இந்த பாலிசியின் **பிரிவு G (III) (3) (b)**-ல் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தவிர்த்து, பாலிசி காலத்தில் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் காப்பீடு அதன் முழு அளவில் காப்புறுதி தொகை பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

காப்புறுதி தொகை அதாவது, நாங்கள் எந்த ஒரு இழப்பிற்காவது இழப்பீடு வழங்கியிருந்தாலும், பாலிசியின் காப்புறுதி தொகை அதன் ஒரிஜினல் தொகையை மீட்டமைப்போம். காலாவதி ஆகாத பாலிசி காலத்திற்கு கழிந்திருக்கும் நாட்களுக்கு நீங்கள் வீதப்படியான பிரீமியம் தொகையைச் செலுத்திவிட வேண்டும். உங்களுக்குச் செலுத்த வேண்டிய நிகர கிளெய்ம் தொகையிலிருந்து நாங்கள் இந்த பிரீமியம் தொகையைக் கழித்துக்கொள்ள முடியும்.

### 3. நாங்கள் எவ்வளவு செலுத்துவோம்

a. காப்பீடு செய்துகொண்டிருக்கும் அபாயங்களில் ஒன்றினால் பொதுவாக உங்கள் வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு பௌதீகரீதியான சேதம் விளைந்திருந்தால், நாங்கள் எங்கள் அபிப்பிராயத்தைப் பொருத்து,

   i. சேதமடைவதற்கு முந்தைய நிலைமைக்கு பெருவாரியாக மீட்டமைவு செய்யும் வகையில் ஆகும் செலவினங்களை நாங்கள் திருபிக் கொடுப்போம், அல்லது

   ii. அந்த உருப்படிகளுக்குப் பதிலாக அதே உருப்படிகளை அல்லது அதுபோன்ற உருப்படிகளை மாற்றிப் பொருத்துவதற்கு ஆகும் செலவினத்தை உங்களுக்குச் செலுத்துவோம், அல்லது

   iii. சேதமடைவதற்கு முந்தைய நிலைமைக்கு பெருவாரியாக மீட்டமைவு செய்யும் வகையில் ஆகும் செலவினங்களை நாங்கள் திருபிக் கொடுப்போம்.

b. அனைத்து உருப்படிகளுக்கும் சேர்த்து நாங்கள் செலுத்தும் தொகை பாலிசி அட்டவணையில் வீட்டிலிருக்கும் பொருள்கள் காப்பீட்டிற்கான அதிகபட்ச காப்புறுதி தொகை அளவில் இருக்கும். ஒருவேளை பாலிசி அட்டவணையில் ஒவ்வொரு உருப்படிக்கு, அல்லது பிரிவிற்கு, அல்லது உருப்படி தொகுப்புகளுக்கு வரம்பு தொகை எழுதப்பட்டிருந்தால், அதிகபட்சம் அந்த வரம்பு அளவிலேயே அந்த உருப்படிக்கு நாங்கள் தொகை செலுத்துவோம்.

## E. கூடுதல் காப்பீடு

### 1. கூடுதல் காப்பீடுகள்:

**a. விலை மதிப்புமிக்க பொருள்களுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்பு அடிப்படையில் காப்பீடு (வீட்டிலுள்ள பொருள்களுக்கு காப்பீட்டின் கீழ்):**

விலை மதிப்புமிக்க பொருள்களுக்கு, நீங்களும் நாங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு ஒரு மதிப்பீட்டுச் சான்றிதழை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும், நாங்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். இருந்தபோதிலும், கோரிக்கை செய்து கொண்டிருக்கும் காப்புறுதி தொகை ரூ. 5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம்) ஆகவும் ஒவ்வொரு தனி உருப்படியின் மதிப்பு ரூ. 1 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மிகையாமல் இருந்தால், மதிப்பீட்டு சான்றிதழ் தேவையை நாங்கள் தளர்த்திக் கொள்வோம்.

i. காப்பீடு செய்துகொண்டிருக்கும் அபாயங்களில் ஒன்றினால் பொதுவாக உங்கள் வீட்டிலிருக்கும் மதிப்புமிக்க பொருள்கள் பௌதீகரீதியான சேதம் அடைந்திருந்தால், நாங்கள் அவைகளை ரிப்பேர் செய்யும் செலவினத்தை உங்களுக்குக் கொடுப்போம்.

ii. ஒருவேளை உங்கள் வீட்டிலிருக்கும் விலை மதிப்புமிக்க பொருள்கள் மொத்தமாக அழிந்துவிட்டால், விலை மதிப்புமிக்க உருப்படி(உருப்படிகளுக்காக) செய்துகொண்டிருக்கும் காப்புறுதிதொகை நாங்கள் வழங்குவோம். ஒருவேளை பாலிசி அட்டவணையில் ஒவ்வொரு உருப்படிக்கு, அல்லது பிரிவிற்கு, அல்லது உருப்படி தொகுப்புகளுக்கு வரம்பு தொகை எழுதப்பட்டிருந்தால், அதிகபட்சம் அந்த வரம்பு அளவிலேயே அந்த உருப்படிக்கு நாங்கள் தொகை செலுத்துவோம். ஒரு ஜோடி அல்லது செட் உருப்படிகளில் ஒன்று மட்டும் சேதமடைந்தால் அல்லது காணாமல் போய்விட்டால் அந்த ஜோடி அல்லது செட் பாழானதாகக் கருதப்படாது.

**b. தனிநபர் விபத்து காப்பீடு:**

காப்பீடு செய்துகொண்டிருக்கும் அபாயங்களின் ஒன்றின் காரணமாக உங்கள் வீட்டுக் கட்டடம் மற்றும் / அல்லது வீட்டிலிருக்கும் பொருள்கள் சேதமடைவதுடன் அசம்பாவிதமாக நீங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணை மரணமடைய நேரும் போது, நபர் ஒருவருக்கு ரூ.5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம்) வீதம் நாங்கள் இழப்பீடு வழங்குவோம்.

காப்பீடு பெற்றிருப்பவர் ஒருவர் அசம்பாவிதமாக மரணமடைய நேர்ந்தால், பாலிசியின் கெடு காலம் வரையில் அவருடைய வாழ்க்கைத் துணைக்கு தனிநபர் விபத்து காப்பீடு

தொடர்ந்திருக்கும்.

### 2. ஆட் -ஆன்:

இந்த திட்டத்தின் கீழ் நாங்கள் வழங்கும் கூட்டு சேர்க்கைகளில் (ஆட்-ஆன்) ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம், நீங்கள் தேர்ந்தெடுத்திருப்பதை பாலிசி அட்டவணையிலும் மற்ற சம்பந்தப்பட்ட பிரிவு(பிரிவுகளில்) மற்றும் / அல்லது மேற்குறிப்புகளில் குறிப்பிட்டு இந்த பாலிசியின் ஓர் அங்கமாகச் சேர்த்துக்கொள்வோம்.

## F. விலக்கல்கள்

கீழே எழுதப்பட்டிருக்கும் நிகழ்வுகளால் அல்லது அதன் காரணமான நேரடி அல்லது மறைமுக பின்விளைவு காரணமாக காப்பீடு அளிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவு சம்பந்தப்பட்ட இழப்புகள் மற்றும் செலவினங்களுக்கு நாங்கள் காப்பீடு எதையும் வழங்கமாட்டோம்:

1. நீங்கள் அல்லது உங்கள் சார்பாக அல்லது உங்கள் சம்மதத்துடன் வேண்டுமென்றே செய்த, தெரிந்து அல்லது நோக்கத்துடன் செய்த மற்றும் செய்யாத செயல்கள்.
2. நீங்கள் அல்லது உங்கள் சார்பாக அல்லது உங்கள் சம்மதத்துடன் வேண்டுமென்றே செய்த, தெரிந்து அல்லது நோக்கத்துடன் செய்த மற்றும் செய்யாத செயல்கள்.
3. போர், படையெடுப்பு, அயல்நாட்டு எதிரியின் விரோதா பாவ நடவடிக்கைகள் அல்லது போர் போன்ற நடவடிக்கைகள் (அறிவிக்கப்பட்ட போராக அல்லது அறிவிக்கப்படாத போராக இருந்தாலும்), உள்நாட்டு போர், கலவரம், மக்கள் எழுச்சி, புரட்சி, கிளர்ச்சி அல்லது இராணுவ நடவடிக்கைகள், அதிகாரப் பறிப்பு ஆகியவை. அணு கழிவுகளால் அல்லது அணு எரிபொருள்கள் எரிப்பதால் உருவாகும் மாசுகள், கதிரியக்கம் காரணமான அயனியாக்கும் கதிர்வீச்சு அல்லது மாசுபடுதல் , அல்லது அணுக்கரு அசெம்பிளி அல்லது அணுக் கூறுகளின் அபாயம் ஏற்படுத்தும் ஆற்றலால் ஏற்படும் கதிரியக்கம், நச்சு, வெடித்தல் அல்லது அவை காரணமாக ஏற்படும் சேதங்கள்.
4. மாசுபாடு அல்லது தூய்மைக்கேடு,
    i. இந்த மாசுபாடு அல்லது தூய்மைக்கேடு காப்பீடு செய்யப்பட்டிருக்கும் அபாயங்கள் அல்லது நிகழ்வுகளிலிருந்து எழுந்தவையாக இருக்க வேண்டும், அல்லது
    ii. காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றிலிருந்து மட்டுமே மாசுபாடு அல்லது தூய்மைக்கேடு நிகழ்ந்திருக்க வேண்டும்.
5. எந்த ஒரு எலக்டிரிகல் / எலக்டிரானிக் மெஷின், சாதனம், ஃபிக்ஸ்சர் அல்லது ஃபிட்டிங்குகளுக்கு நிகழ்ந்திருக்கும் இழப்பு, சேதம் அல்லது அழிவு அவை வரம்பு மீறி செயல்பட வைத்திருந்தட்தால், அதிக அழுத்தம், ஷார்ட் சர்க்யூடிங், வளைவு, சுயமாக வெப்பமடைதல் அல்லது மின் கசிவு காரணமாக அல்லது எதன் காரணமாக நிகழ்ந்திருந்தாலும் (மின்னல் உட்பட). ஒரு குறிப்பிட்ட மெஷினுக்கு இறுதியாக இழப்பு, சேதம் அல்லது அழிவு ஏற்பட்டிருக்கும் போது மட்டுமே இந்த விலக்கல் பொருந்தும்.
6. பொன் அல்லது செட்செய்யப்படாத விலையுயர்ந்த கற்கள், கையெழுத்துப் பிரதிகள், திட்டங்கள், வரைபடங்கள், ஆவணப் பத்திரங்கள், பொறுப்புகள் அல்லது ஆவணங்கள் அவை எதுவாக இருந்தாலும், நாணயங்கள் அல்லது காகித கரன்சி பணங்கள், காசோலைகள், வாகனங்கள் மற்றும் வெடிபொருள்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் குறிப்பிட்டு பாலிசியில் எழுதப்பட்டிருக்காத போது.
7. காணாமல் போயிருக்கும் காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது அது தவறான இடத்தில் வைக்கப்பட்டிருந்தால் அல்லது அது காணாமல் போவதற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் எதுவும் திட்டவட்டமாகத் தெரியவராத போது.
8. உங்கள் வீட்டிலிருந்து அகற்றப்பட்டு வேரிடத்திற்கு மாற்றப்பட்ட காப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கு விளையும் இழப்பு அல்லது சேதம்.
9. வருமான இழப்பு, தாமதத்தினால் விளையும் இழப்பு, சந்தை இழப்பு அல்லது வேறு காரணமான இழப்பு அல்லது மறைமுக இழப்பு அல்லது சேதம் அவை எப்படிப்பட்டதாக இருந்தாலும் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும்.
10. காப்பீடு செய்யப்பட்ட சொத்து பழுதுபார்க்கப்பட்டு அல்லது மீட்டமைக்கப்பட்ட பிறகு அதன் சந்தை விலையில் சரிவு ஏற்பட்டிருப்பது.
11. உங்கள் வீட்டு கட்டட கட்டுமானத்தில் மேற்கொள்ளப்பட்ட சேர்க்கை, விரிவு அல்லது திருத்தி அமைத்தல் காரணமாக ஆரம்பமாகும் தேதியில் அல்லது பாலிசியைப் புதுப்பிக்கும் தேதியில் இருந்த கட்டட உட்பரப்பை விட கட்டட உட்பரப்பு 10% அதிகமாதல், இந்த அதிகரித்திருக்கும் இடத்திற்கு நீங்கள் கூடுதல் பிரீமியம் செலுத்தவில்லை என்றால் மற்றும் இவ்வாறு அதிகரித்திருக்கும் சேர்க்கை, விரிவு அல்லது திருத்தம் பாலிசி மேற்குறிப்பில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்றால்.
12. கிளெய்ம் தயாரிக்க ஆகும் செலவினங்கள், கட்டணங்கள் அல்லது செலவுகள் ஏதாவது இருந்தால்.

## G. நிபந்தனைகள்

### (I) உங்கள் பொறுப்புகள்

### பாரத் கிரிஹ ரக்ஷா பாலிசி

**1. விண்ணப்பப் படிவத்திலும் அதனைச் சார்ந்த ஆவணங்களிலும் உண்மையான மற்றும் முழுமையான விவரங்களைக் கொடுக்க வேண்டும்**

a. உங்களுக்கு நாங்கள் காப்பீடு வழங்குவதற்கும் மற்றும் அதற்கான வரையறைகளைத் தீர்மானிப்பதற்கும் எங்களுக்குத் தேவைப்படும் உங்களுக்குத் தெரிந்திருக்கும் அல்லது நியாயமாக உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய விவரங்களை நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறீர்கள். நாங்கள் உங்களிடம் குறிப்பிட்டுக் கேட்ட்டுக்கொள்ளாமல் இருந்தாலும் கூட, சம்பந்தப்பட்ட முக்கிய விவரங்களை நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பீர்கள். இந்த விவரங்கள் அல்லது அறிவிப்புகளை உங்கள் சார்பாக மற்றவர்கள் எங்களுக்குத் தெரிவிக்கவும் இந்த கடமை அவர்களைக் கட்டுப்படுத்தும்.

b. நீங்கள் அல்லது உங்கள் சார்பில் வேறொருவர் எங்களுக்கு விண்ணப்பப் படிவத்தில், அறிவிப்புகளில் மற்றும் இதர பிற ஆவணங்களில் (எழுத்து மூலமாக அல்லது எலக்டிரானிக் சாதனத்தில்) தெரிவிக்கும் உங்களைப் பற்றிய, உங்கள் குடும்பம், உங்கள் வீட்டு கட்டடம் மற்றும் வீட்டிலிருக்கும் பொருள்கள் குறித்த விவரங்கள் அடிப்படையில் நாங்கள் உங்களுக்கு காப்பீடு வழங்க. ஒப்புக்கொண்டிருக்கிறோம். நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கும் சரியான மற்றும் முழுமையான விவரங்கள் நம்மிடையே செய்யப்படும் ஒப்பந்தத்திற்கு ஆதாரமாக இருக்கும். நீங்கள் அல்லது உங்கள் சார்பாக வேறொருவர் அறிவித்திருக்கும் இந்த விவரங்கள் உண்மையானவை மற்றும் உங்களைப் பற்றிய மற்றும் உங்கள் குடும்பம், உங்கள் வீட்டுக் கட்டடம் மற்றும் வீட்டிலிருக்கும் பொருள்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான விவரங்கள் எதையும் நீங்கள் தெரிவிக்காமல் இருக்கவில்லை என்ற நிபந்தனைகள் அடிப்படையில் நாங்கள் உங்களுக்குத் தொகை வழங்க உறுதி அளிக்கிறோம்.

**2. நீங்கள் முக்கியமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகள்:** நீங்கள் இவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டும்:

a. நீங்கள் உங்கள் வீட்டு கட்டடத்தையும் வீட்டிலிருக்கும் பொருள்களையும் நல்ல மாதிரியாகவும் பொறுப்பாகவும் பராமரிக்க வேண்டும், ஒருவேளை காப்பீடு செய்யப்பட்டிருக்கும் அபாயங்களில் ஒன்று நிகழும் பட்சத்தில் ஏற்படும் இழப்பு அல்லது சேதங்கள் மோசமாகாமல் இருக்கும் வகையில் உங்கள் வீட்டு கட்டடத்தின் கட்டுமானத்தில் குறை அல்லது கோளாறுகள் ஏதும் இருக்காமல், வெளியில் தெரியாமல் இருக்க வைத்திருக்க வேண்டும்,

b. உங்கள் வீட்டு கட்டடம் மற்றும் வீட்டிலிருக்கும் பொருள்கள் களவு போகாமல், இழப்பு மற்றும் சேதமடையாமல் இருக்கும் படி கவனித்துக்கொள்ள வேண்டும்,

c. உங்கள் வீட்டு கட்டடத்தில் அனுமதிக்கப்படாதவர்கள் யாரும் வசிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**3. சூழ்நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுபவைகளைத் தெரிவிக்க வேண்டும் :** இவைகளை நீங்கள் உடனே எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்:

a. உங்கள் முகவரியில் மாற்றங்கள்,

b. நீங்கள் உங்கள் வீட்டு கட்டடத்தை திருத்தி அமைக்கிறீர்கள், விரிவாக்குகிறீர்கள் அல்லது பெரிது படுத்துகிறீர்கள்

c. நீங்கள் உங்கள் வீட்டை வாடகைக்கு விடுகிறீர்கள் அல்லது உங்கள் வீட்டு கட்டடத்தில் நீங்கள் மட்டுமே வசிக்கவில்லை.

d. உங்கள் வீட்டு கட்டட உயபோகத்தை மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.

**4. கிளெய்ம் செய்திருப்பதை பரிசீலனை செய்வதற்கும் விசாரணை செய்து பார்ப்பதற்கும் அனுமதிக்கிறீர்கள்:**

நீங்கள் சமர்ப்பிக்கும் கிளெய்ம் குறித்த சர்வே / விசாரணைகளை மேற்கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்பதுடன் முழு ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும். உங்கள் வீட்டு கட்டடம், மற்றும் வீட்டு இன்டீரியர் உள்ளிட்ட வீட்டிலிருக்கும் பொருள்களை பரிசீலனை செய்ய, தேவைப்படுவது போல், எங்களையும் , சர்வேயர், அதிகாரி அல்லது மற்ற பிரதிநிதிகளை அனுமதிக்க வேண்டும், புகைப்படங்களை எடுக்க அனுமதிக்க வேண்டும், தேவைப்படும் பட்சத்தில் காப்பீடு பெற்றிருக்கும் பொருள்கள் காப்பீடு அளிக்கப்பட்ட அபாயத்தினால் பாதிப்படைந்திருப்பதை அறிவியல் ரீதியான பரிசோதனைகள் மற்றும் விசாரணைகளுக்கு அனுமதித்து ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். உங்கள் கிளெய்ம் குறித்து உங்களிடம் கேட்கப்படும் கேள்விகள் அனைத்திற்கும் நீங்கள் உண்மையான பதிலை முழுமையாக அளிக்க வேண்டும், எங்களுக்குத் தேவைப்படும் சார்புடைய ஆவணங்களையும் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

**5. விண்ணப்பப் படிவத்திலும் அதனைச் சார்ந்த ஆவணங்களிலும் உண்மையான மற்றும் முழுமையான விவரங்களைக் கொடுக்க வேண்டும்**

## பாரத் கிரிஹ ரக்ஷா பாலிசி

உங்கள் கிளெய்ம் படிவத்திலும் உண்மையான விவரங்களை முழுமையாக எழுதி உண்மையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஒருவேளை நீங்கள் பொய்யான தகவல் அல்லது ஆவணங்களை கிளெய்ம் படிவத்துடன் கொடுத்தால் அல்லது முக்கியமான விவரங்களைக் கொடுக்காமல் மறைத்தால் (எழுத்து மூலமாக அல்லது எலக்ட்ரானிக் மூலமாக), உங்கள் இழப்பீடு கோரிக்கையை நிராகரிக்கும் உரிமையை நாங்கள் பெற்றிருப்போம். உங்கள் பாலிசியியையும் நாங்கள் இரத்து செய்ய நேரிடலாம்.

### (II) பாலிசியைப் புதுப்பித்தல்

1. **பாலிசி முடிவடைதல்:** இந்த பாலிசி அதன் கெடு தேதியில் முடிவடையும்.
